

. 4 பக்கங்கள் . விலை ரூ. 5

தின தமிழ்

தினசரி காலை நாளிதழ்

தமிழாய்! தமிழனாய்!! தமிழ்மொழிக்காய்!!!

DHINA TAMIL
RNI No : TNTAM/2023/85936



www.dhinatamil.com • மாற்றத்தின் ஆரம்பம் • dhinatamil

♦ பதிப்பு : நாகர்கோவில் ♦ 21.10.2026 ♦ மலர் 04 ♦இதழ்: 294 ♦ புதன்

♦Edition : Nagercoil ♦21.10.2026 ♦ Vol : 04 ♦Issue : 294 ♦Page : 4 ♦Rs. 5/-

பொருளாதாரத்தில் நலிந்த பிரிவினரின் விவசாய வருமானத்துக்கு விலக்கு

புதுடெல்லி: பொருளாதாரத்தில் நலிந்த பிரிவினருக்கான இடஒதுக்கீட்டு (ஈடபுள்யூஎஸ்) விதிகளில் விவசாய வருமானத்துக்கு விலக்கு அளிக்க மத்திய அரசு திட்டமிட்டுள்ளது. இதற்காக ஈடபுள்யுஎஸ் இடஒதுக்கீடு சட்டத்தில் திருத்தம் கொண்டு வர நடவடிக்கைகள் எடுக்கப்பட உள்ளன.

உயர் சமூகத்தினரில் பொருளாதார ரீதியாக பின்தங்கியவர்களுக்கு கல்வி மற்றும் வேலை வாயப்பில் 10 சதவிகித இடஒதுக்கீடு அளிக்கும் சட்டம் கடந்த ஜனவரி 2019 இல் அமலானது. இதற்கான வருமான உச்ச வரம்பு ஆண்டுக்கு ரூ.8 லட்சம் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஒபிசி, எஸ்சி, எஸ்டி ஒதுக்கீடுகளுக்கு வெளியே உள்ளவர்கள் இதன்மூலம் பலன் பெறுகின்றனர்.

விவசாய வருமானம் காரணமாக, உயர் சமூகத்தைச் சேர்ந்த பலர் இட ஒதுக்கீட்டின் பலன்களைப் பெற முடிவதில்லை என புகார் எழுந்ததை அடுத்து, இது குறித்து ஆய்வுசெய்த பல்கலை கழக மானியக் குழு, விவசாய வருமானத்தில் இருந்து விலக்கு அளிக்கும் யோசனையை அறிக்கை ஒன்றின்மூலம் மத்திய அரசுக்கு அளித்தது.



இதன் அடிப்படையில், 'ஐந்து ஏக்கருக்கும் குறைவான விவசாய நிலம் வைத்திருத்தல்' ஆகிய நிபந்தனையை நீக்க அரசு திட்டமிட்டுள்ளது. இவற்றில்விவசாயத்தில் கிடைக்கும் வருமானத்திற்கு விலக்கு அளிக்கத் திட்டமிடப்படுகிறது. இந்த சட்டதிருத்தத்தின் மூலம் விவசாயம் செய்யும் உயர்சமூகத்தினரும் பலன் பெறுவார்கள்.

உத்தரப்பிரதேசம், உத்தராகண்ட், பஞ்சாப், கோவா மற்றும் மணிப்பூர் மாநிலங்களின் சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெற உள்ளன. இந்த சூழலில், மத்திய அரசின் இந்த முயற்சி வாக்கு அரசியலில் பலன் அளிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஏனெனில், இந்த திருத்தம் மூலம், உயர்சமூகத்தினரில் மேலும் பலர் பலனடைவார்கள். இதன்மூலம் அரசியல் ஆதாயம் தேடும் முயற்சியாகவேஇந்தமுடிவை மத்திய அரசு எடுக்க இருப்பதாகத் தெரிகிறது.

டெல்லி வட்டாரத்தில் வெளியாகும் தகவல்களின்படி, 'இந்த திருத்தம் ஐந்து மாநிலங்களில் நடைபெறவுள்ள சட்டப்பேரவைத் தேர்தல்களுக்கு முன்னதாக கொண்டுவரத் திட்டமிடப்படுகிறது.

இதை முழுமையாகச் செய்யாமல், இந்த ஐந்து ஏக்கர் என்பதை மேலும் அதிகரிக்கும் வாய்ப்புகளும் உள்ளன. இம்மாற்றங்களை எதிர்ப்பவர்கள் விவசாயிகளின் நலனுக்கு எதிரானவர்கள் என்ற கருத்து உருவாகும் வாய்ப்புகள் உள்ளன.

ஈடபுள்யுஎஸ் ஒதுக்கீட்டால் தற்போது 18.2 சதவீத குடும்பங்கள் பலன்களைப் பெறுகிறார்கள். இவர்களது வருமானத்தில் விவசாயம், வணிகம், ஊதியம் மற்றும் தொழில்முறை வருமானம் உள்ளிட்ட அனைத்தும் சேர்த்து கணக்கிடப்படுகிறது.

இந்த ஒதுக்கீட்டைப் பெறும் விவசாயிகள், ஐந்து ஏக்கருக்கு குறைவாகவே நிலம் வைத்திருப்பவர்கள் மட்டுமே தகுதியுடையவர்கள். இதனால், இந்த மசோதாவிற்கு துவக்கத்திலேயேஎதிர்ப்புகள் கிளம்பின.

இந்த நிலையில் சட்ட திருத்தத்திற்கும் எதிர் கட்சிகள் எதிர்ப்பு தெரிவித்தால் அது நாடாளுமன்ற நிலைக்குழுவிற்கு பரிந்துரைக்கப்படும் வாய்ப்புகளும் உள்ளன.

பாரா ஆசிய விளையாட்டு டேபிள் டென்னிஸில் வெண்கலம்: ஜெஹான் டொரப் மதனுக்கு முதல்வர் வாழ்த்து

சென்னை: பாரா ஆசிய விளையாட்டு டேபிள் டென்னிஸ் விளையாட்டில் ஆண்கள் ஒற்றையர் கிளாஸ் 1 பிரிவில் வெண்கலப் பதக்கம் வென்ற ஜெஹான் டொரப் மதனுக்கு வாழ்த்து தெரிவித்துள்ள முதல்வர் விஜய், அரசு சார்பில் ரூ. 30 லட்சம் ஊக்கத்தொகையும் அறிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட சமூக வலைதளப் பதிவில், "ஜப்பானில் நடைபெற்றுவரும் 5வது பாரா ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் டேபிள் டென்னிஸ் விளையாட்டில் ஆண்கள் ஒற்றையர் கிளாஸ் 1 பிரிவில் வெண்கலப் பதக்கம் வென்று தமிழ் நாட்டிற்கும், இந்தியாவிற்கும் பெருமை சேர்த்துள்ள வீரர் ஜெஹான் டொரப் மதனுக்கு எனது மனமார்ந்த வாழ்த்துகள் மற்றும் பாராட்டுகள்.



அவரது சாதனையைப் பாராட்டும் வகையில், தமிழ்நாடு அரசு சார்பில் ரூ. 30 லட்சம் உயரிய ஊக்கத்தொகை வழங்கப்படும். தமிழ்நாட்டைச் சேர்ந்த இளம் பாரா விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு ஊக்கத்தையும், உத்வேகத்தையும் அளிக்கும் வகையில் இவ்வெற்றி அமைந்துள்ளது. வீரர் ஜெஹான் டொரப் மதன் வருங்காலங்களிலும் வெற்றிகளைப் பெற்று மேலும் பல உயரங்களை எட்ட வாழ்த்துகிறேன்" எனத் தெரிவித்துள்ளார்.

வெள்ளிச்சந்தை அருகே ஆட்டோ கவிழ்ந்து மூதாட்டி பலி
3 பேர் படுகாயம்

குளச்சல், அக்.21 மணவாளக்குறிச்சி அருகே உள்ள கடியப்பட்டணம் கிறிஸ்துராஜா நகர் தெருவை சேர்ந்தவர் சூசை ஆண்டனி (62) கடலில் மீன் பிடி தொழில் செய்து வருகிறார். இவரது மனைவி வின்னி பெர்ட் (60). கடந்த 2ம் தேதி வின்னி பெர்ட், அவரது மகள்கள் சோபியா (32), ஜிஸ்மா (36), ஜிஸ்மாவின் இரண்டு வயது குழந்தை ஆகியோர் முட்டத்தில் உள்ள உறவினர் வீட்டிற்கு செல்வதற்கு கடியப்பட்டணத்தில் இருந்து ஒரு ஆட்டோவில் புறப்பட்டு சென்றனர். ஆட்டோ முட்டம் லைட் ஹவுஸ் அம்மாண்டிவிளை சாலையில் சென்று கொண்டிருந்த போது திடீரென கட்டுப்பாட்டை இழந்து சாலையோரம் கவிழ்ந்தது. இதில் சவாரி சென்ற 4 பேரும் படுகாயம் அடைந்தனர். ஆட்டோ டிரைவர் சுஜன் ராஜுக்கு காயம் ஏதும் ஏற்படவில்லை. உடனே அந்த பகுதியினர் அவர்களை மீட்டு அருகில் உள்ள ஒரு தனியார் மருத்துவமனையில் சேர்த்தனர். இதில் வின்னி பெர்ட் மேல் சிகிச்சைக்காக ராஜாக்கமங்கலத்தில் உள்ள ஒரு தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்தார். மற்ற மூன்று பேரும் முட்டம் தனியார் மருத்துவமனையில் புறநானியா சிகிச்சை பெற்று வீடு திரும்பினர். இந்த நிலையில் கடந்த 16 நாட்களாக மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த வின்னி பெர்ட் நேற்று முன்தினம் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். இது குறித்து அவரது கணவர் சூசை என்ற அணி வெள்ளிச்சந்தை போலீசில் புகார் அளித்தார். போலீசார் வழக்கு பதிவு செய்து பிரேதபரிசோதனைநடத்தி விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

நாகர்கோவிலில் வாகன சோதனையின் போது போலீஸ் சப் இன்ஸ்பெக்டரை கார் ஏற்றிக் கொல்ல முயற்சி
கல்லூரி பேராசிரியர் கைது

நாகர்கோவில், அக்.21 நாகர்கோவில் போக்குவரத்து ஒழுங்கு பிரிவு சப் இன்ஸ்பெக்டர் அசோக் தலைமையில் நேற்று முன்தினம் இரவு வடசேரி பகுதியில் போலீசார் வாகன சோதனையில் ஈடுபட்டிருந்தனர். அப்போது அந்த வழியாக காரை ஓட்டி வந்த நாகர்கோவில் கிறிஸ்டோபர் நகர் பகுதியை சேர்ந்த கல்லூரி பேராசிரியர் சாமுவேல் (35) என்பவர் மது போதையில் இருந்தது தெரிய வந்தது. இதை அடுத்து சப் இன்ஸ்பெக்டர் அசோக் போக்குவரத்து விதிமுறையை மீறி குடி போதையில் வாகனம் ஓட்டி வந்ததாக அவர் மீது வழக்கு பதிவு செய்து அபராதம் விதித்தார். அப்போது சாமுவேல் போலீசாரிடம் தகராறு செய்து, தான் அவசரமாக செல்ல வேண்டும் என்று கூறியுள்ளார்.

அப்போது போலீசார் போதையில் கார் ஓட்ட அனுமதிக்க முடியாது எனவும், உங்கள் மீது வழக்கு பதிவு செய்த அபராதம் விதித்து கார் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது என கூறியுள்ளனர். அவசரமாக செல்ல வேண்டும் என்றால் வேறொரு நபரை வரவழைத்து காரில் செல்லுங்கள் என கூறி உள்ளனர். அந்த நேரத்தில் காருக்குள் இருந்த சாமுவேல் திடீரென வேகமாக காரை ஓட்டி சென்றுள்ளார். உடனடி எஸ்ஐ அசோக் பைக்கில் துரத்தி சென்று, காரை மடக்கி உள்ளார். அப்போது எஸ்ஐ மீது காரால் வேகமாக மோதி சாமுவேல் அவரை கொல்ல முயற்சித்ததாக கூறப்படுகிறது.

இதில் பைக்கில் இருந்து குதித்து அசோக் தப்பித்துள்ளார். அப்போது அந்த பகுதியில் போக்கு வரத்து நெருக்கடி ஏற்பட்டுள்ளது. அப்போது காரில் இருந்த சாமுவேல் தப்பி ஓடிவிட்டார். இதை அடுத்து அசோக் வடசேரி காவல் நிலையத்தில் புகார் அளித்தார். போலீசார் பேராசிரியர் சாமுவேலை கைது செய்தனர். பின்னர் அவர் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.

குமரியில் விஜயதசமி கொண்டாட்டம் கோயில்களில் குழந்தைகளுக்கு ஏடு தொடங்குதல் நிகழ்ச்சி



நாகர்கோவில், அக். 21 இந்துக்களின் முக்கிய பண்டிகைகளில் ஒன்றான நவராத்திரி விழா கடந்த 11ஆம் தேதி தொடங்கியது. ஒன்பதாவது நாளான நேற்று முன்தினம் ஆயுத பூஜை கொண்டாடப்பட்டது. மாவட்டம் முழுவதும் ஆயுத பூஜை கொண்டாடப்பட்டது. காவல் நிலையங்கள், மருத்துவ மனைகள் போன்ற இடங்களில் ஆயுத பூஜை கொண்டாட்டங்கள் நடந்தன. இதே போன்று தொழிலாளர்களும் தங்கள் நிறுவனங்களில் பூஜை செய்தனர். குமரி மாவட்டம் முழுவதும் உள்ள அரசு போக்குவரத்து கழக பணிமனைகளிலும் ஆயுதபூஜையொட்டி பஸ்கள் அலங்கரிக்கப்பட்டு பூஜைகள் நடத்தப்பட்டன.

நவராத்திரி விழாவின் பத்தாவது நாளான நேற்று 20ம் தேதி விஜயதசமி விழா கொண்டாடப்பட்டது. விஜயதசமி என்றால் வெற்றி என்பதை குறிக்கும் சொல்லாகும். நேற்று தொடங்கிய அனைத்து காரியங்களிலும் வெற்றி கிடைக்கும் என்ற நம்பிக்கை உள்ளதால் குமரி மாவட்டத்தில் உள்ள கோயில்கள், பள்ளிகளில் குழந்தைகளுக்கு ஏடு தொடங்குதல் எனப்படும் வித்தியா ரம்பம் என்ற நிகழ்வு தொடங்கி நடைபெற்றது.

நாகர்கோவில் நாகராஜர் கோவில், கன்னியாகுமரி பகவதி அம்மன் கோவில், ஆதிபராசக்தி சித்தர்கள் பீடம், பார்வதிபுரம் வனம லீஸ்வரர் கோவிலிலுள்ள சரஸ்வதி சன்னதி மற்றும் திருவட்டாறு ஆதிகேசவ பெருமாள் கோவில் போன்ற கோவில்களில் இந்த வித்தியாரம்பம் நிகழ்வுகள் நடைபெற்றன.

குழந்தைகளுக்கு தாம்பூல தட்டில் வைக்கப்பட்டிருந்த அரிசியில் 'அ','ஆ' எழுத்துக்கள் எழுத கற்றுக் கொடுத்தனர். தங்க ஊசியால் குழந்தைகள் நாவில் எழுதும் நிகழ்ச்சியும் நடந்தது. இதனை போன்று அரசு, அரசு உதவிபெறும் பள்ளிகள், தனியார் பள்ளிகளிலும் விஜயதசமி முன்னிட்டு மாணவர்சேர்க்கை நிகழ்வுகள் நடைபெற்றன.

குமரியில் மர்ம காய்ச்சலுக்கு 2 வயது பெண் குழந்தை உயிரிழப்பு

நாகர்கோவில், அக். 21 கன்னியாகுமரி அடுத்த தென்தாமரை குளம் அருகே மர்ம காய்ச்சலுக்கு இரண்டு வயது பெண் குழந்தை உயிரிழந்த சம்பவம் வரும் பரு வாரப்பை ஏற்படுத்தியுள்ளது.

தூத்துக்குடி மாவட்டம் சண்முகபுரத்தை சேர்ந்தவர் மணிகண்டன் (28). எலக்ட்ரீசியன். இவரது மனைவி ஐஸ்வர்யா (26). இவர் தென்தாமரை பகுதியை சேர்ந்தவர் ஆவார். இவர்களுக்கு 2 மகள்கள் உள்ளனர். கடந்த வாரம் தென்தாமரை குளத்தில் உள்ள தனது தாயார் வீட்டிற்கு இரு குழந்தைகளுடன் ஐஸ்வர்யா வந்திருந்தார். அப்போது மூத்த மகள் தீக்ஷா நாராயணி (2) என்ற குழந்தைக்கு கடந்த 17ஆம் தேதி காய்ச்சல் சளி இருமல் இருந்தது. இதை எடுத்து முகிலன் விளையில் உள்ள ஒரு தனியார் கிளினிக் கொண்டு சென்றனர். அங்கு குழந்தைக்கு பரிசோதனை செய்து ஊசி மாத்திரை வழங்கியும், காய்ச்சல் குறையவில்லை. இதையடுத்து மறுநாள் நாகர்கோவில் உள்ள பிர பல தனியார் மருத்துவமனைக்கு மாறி மாறி அழைத்துச் சென்றனர். . ஆனால் குழந்தை கவலைக்கிடமாக இருப்பது தெரிவிக்கப்பட்ட நிலையில் நேற்று முன்தினம் குழந்தை தீக்ஷா பரிதாபமாக உயிரிழந்தார். இது குறித்து தென்தாமரை குளம் காவல் நிலையத்திற்கு தகவல் தெரிவிக்கப்பட்டு குழந்தையின் உடலை பிரேத பரிசோதனைக்காக குமரி அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

நேற்று குழந்தையின் உடல் பிரேத பரிசோதனை செய்யப்பட்டது. மருத்துவ அறிக்கைக்கு பின்னர் தீக்ஷா எப்படி இறந்தார் என்பது தெரிய வரும் என போலீசார் கூறியுள்ளனர். மேலும் சுகாதாரத் துறை அதிகாரிகளும் சென்று விசாரணை நடத்தினர்.

கன்னியாகுமரி பகவதி அம்மன் கோவிலில் நவராத்திரி விழா; பரிவேட்டை நடைபெற்றது

கன்னியாகுமரி, அக்.21 கன்னியாகுமரி பகவதி அம்மன் கோவிலில் இந்த ஆண்டுக்கான நவராத்திரி திருவிழா கடந்த 11ம் தேதி முதல் தொடங்கி நடைபெற்று வந்தது. திருவிழாவையொட்டி தினமும் அம்மனுக்கு சிறப்பு அபிஷேகம், சிறப்பு பூஜை, சிறப்பு வழிபாடு, அலங்கார தீபாராதனை, அன்னதானம் மாலையில் சமய உரை அதைத்தொடர்ந்து பல வகையான கலை நிகழ்ச்சிகள், பரத நாட்டியம், இரவில் வாகன பவனி போன்ற பல்வேறு நிகழ்ச்சிகளும் நடைபெற்று வந்தது.

திருவிழாவின் சிகர நிகழ்ச்சியான பரிவேட்டை திருவிழா 10ம் திருவிழாவான நேற்று நடைபெற்றது. இதையொட்டி நேற்று அதிகாலை 4.30 மணிக்கு அம்மனுக்கு சிறப்பு அபிஷேகம், அதனைத் தொடர்ந்து காலை 10 மணிக்கு கோவிலின் வெளிப்பிரகாரத்தில் உள்ள அலங்கார மண்டபத்தில் எலுமிச்சம்பழம் மாலை களால் அலங்கரிக்கப்பட்ட வெள்ளி குதிரை வாகனத்தில் அம்மன் எழுந்தருளி பக்தர்களுக்கு அருள்பாலிக்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. பின்னர்



அன்னதானம், பகல் 12.15 மணிக்கு கோவிலில் இருந்து மகாதானபுரம் நோக்கி அம்மனின் பரிவேட்டை ஊர்வலம் பக்தர்கள் புடைசூழ தொடங்கியது. இந்த ஊர்வலத்தின் தொடக்க நிகழ்ச்சியாக வெள்ளிக்குதிரை வாகனத்தில் அம்மன் கோவிலை விட்டு வெளியே வரும்போது போலீசார்துப்பாக்கி ஏந்தி நின்று அணிவகுப்பு மரியாதை அளித்தனர்.

இந்நிகழ்ச்சியில் கன்னியாகுமரி மாவட்ட திருக்கோவில்களின் இணை ஆணையர் ஜான்சிராணி, நாகர்கோவில் தேவசம் தொகுதி கண்காணிப்பாளர் ஜெயசுதா, கோவில் மேலாளர் ஆனந்த், பக்தர்கள் சங்க தலைவர் வேலாயுதம், செயலாளர் முருகன், ராஜன் மற்றும் திரளான பக்தர்கள் கலந்து கொண்டனர். அதனைத் தொடர்ந்து கன்னியாகுமரி பகவதி அம்மன் பக்தர்கள் சங்கம் சார்பில் கோவிலில் இருந்து புறப்படும் அம்மனின் பரிவேட்டை ஊர்வலத்தில் யானை, குதிரை, முத்துக்குடை ஊர்வலம், நாதஸ்வரம், பஞ்ச வாத்தியம், செண்டை மேளம், தேவராட்டம், கோலாட்டம், கேரளா புகழ் தையம் ஆட்டம், சிலம்பாட்டம் ஆகியவை நடைபெற்றது.

பரிவேட்டை ஊர்வலம் மாலை 6.30 மணிக்கு மகாதானபுரத்தில் உள்ள பரிவேட்டை மண்டபத்தை சென்று அடைந்தது. அங்கு பகவதி அம்மன் பாணாசுரன் என்ற அரக்கனை அம்புகள் எய்து வதம் செய்து அழிக்கும் பரிவேட்டை நிகழ்ச்சி நடைபெற்றது.

வேலூரில் டி.வி.ஆர். எலக்ட்ரானிக்ஸ் நிறுவனத்தின் பிரம்மாண்ட கடை திறப்பு விழா



வேலூர் அக்21 வேலூர்: வேலூர் மாநகர் ஆரணி சாலை சாய்நாதபுரத்தில் டி.வி.ஆர். எலக்ட்ரானிக்ஸ் நிறுவனத்தின் பிரம்மாண்ட கடை திறப்பு விழா நேற்று நடை பெற்றது. இந்த விழாவில் தமிழக வெற்றிக் கழகத்தின் (தவெக) சட்டமன்ற உறுப்பினர் எம்.எம். வினோத் கண்ணன், சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு நிறுவனத்தைத் திறந்து வைத்தார். இந்தநிறுவனத் தில் 5.1 மற்றும் 7.2 ஆம்ப்ளிஃபையர் சாதனங்கள், ஸ்பீக்கர்கள், ஹோம் தியேட்டர், எல்.இ.டி. தொலைக்காட்சிகள் விற்பனை மற்றும் சேவை, சிசிடிவி கேமராக்கள் விற்பனை, நிறுவுதல் மற்றும் பராமரிப்புப் பணிகள் உள்ளிட்ட சேவைகள் வழங்கப்படுகின்றன. வேலூர் சாய்நாதபுரம், ஆரணி சாலையில் அமைந்துள்ள இந்நிறுவனம், வாடிக்கையாளர்களுக்கு தரமான மின்னணு சாதனங்கள் மற்றும் நம்பகமான சேவைகளை வழங்கும் நோக்கில் தொடங்கப்பட்டுள்ளது. மேலும் இந்த நிகழ்ச்சி ஏற்பாட்டினை உரிமையாளர் தரணி வேந்தன். ஆர் மிக சிறப்பான ஏற்பட்டினை செய்திருந்தார்.

நாகர்கோவில் பார்வதிபுரம் வனமாலீஸ்வரர் சரஸ்வதி கோவிலில் வித்யாரம்பம் என்ற குழந்தைகளுக்கு ஏடு தொடங்கும் நிகழ்வு



நவராத்திரி விழா ஆண்டு தோறும் நாடு முழுவதும் விமர்சையாக கொண்டாடப்படுகிறது, அந்த வகையில் இந்த ஆண்டுக்கான நவராத்திரி பூஜை கடந்த அக்டோபர் 11ஆம் தேதி தொடங்கி அக்டோபர் 19ஆம் தேதி நேற்று சரஸ்வதி பூஜை நாடு முழுவதும் விமர்சையாக நடை பெற்றது, பத்தாம்நாளான இன்று விஜயதசமி நடை பெற்று வருகிறது இன்று குழந்தைகளுக்கு கல்வியின் தொடக்கமான சரஸ்வதி தேவியை நினைத்து ஏடு எழுதுதல் என்னும் வித்யாரம்பம் நிகழ்ச்சி நடைபெறும் அந்த வகையில் கன்னியாகுமரி மாவட்டத்தில் பிரசித்தி பெற்ற நாகர்கோவில் அடுத்த பார்வதிபுரம் வன மாலீஸ்வரர் சரஸ்வதி ஆலயத்தில் மிக விமர்சையாக வித்யாரம்பம் நிகழ்ச்சி நடை பெற்றது, அங்குள்ள சரஸ்வதி ஆலயம் முன்பு கோவில் அர்ச்சகர்கள் குழந்தைகளுக்குதங்க எழுத்தாணியால் ஆ என்னும் அகர எழுத்தை எழுதி கல்வி பயணத்தை தொடங்குவார் பாரம்பரிய வழக்கப்படி தேனில் தங்கத்தால் செய்யப்பட்ட எழுத்தாணியை நனைத்து குழந்தையின் நாக்கில் அன்னை சரஸ்வதி அருளால் பிரணவ மந்திரம் எழுதப்படும் அதே போன்று அர்ச்சகர்கள் குழந்தையின் கையை பிடித்து அரிசி தட்டில் ஓம் ஹரி ஸ்ரீ கணபதயே நமஹ என்று எழுதுவர் இந்நிகழ்வில் உள்ளூர் வாசிகள் மட்டுமல்லாமல் வெளி மாவட்டங்கள் வெளி மாநிலம் கேரளாவில் இருந்தும் ஏராளமான பக்தர்கள் தங்கள் குழந்தைகளை அழைத்து வந்து வித்யாரம்பம் ஏடு எழுதும் சடங்கில் கலந்து கொண்டனர்.

திருவள்ளூர் மாவட்டத்தில் கிலோ ரூ.30க்கு சன்ன ரக அரிசி விற்பனை தொடக்கம்



திருவள்ளூர், அக்.21 வெளிச்சந்தையில் அரிசி விலை உயர்வைக் கட்டுப்படுத்தும் வகையில், கூட்டுறவு அங்காடிகள் மூலம் கிலோ ரூ.30க்கு 'A' தர சன்ன ரக அரிசி விற்பனை தமிழக அரசால் தொடங்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ், குடும்பம் ஒன்றுக்கு 5 கிலோ அரிசி வழங்கப்படும். இத்திட்டம் 31.03.2027 வரை அல்லது மறு உத்தரவு வரும் வரை செயல்படுத்தப்படும்.

திருவள்ளூர் மாவட்டத்தில் தேர்வு செய்யப்பட்ட விற்பனை மையங்களில் அரிசி விற்பனையை மாவட்ட ஆட்சியர் ச.கவிதா தொடங்கி வைத்தார். நிகழ்ச்சியில் கூட்டுறவுத்துறை அலுவலர்கள் மற்றும் கூட்டுறவு நிறுவனப் பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

திருவள்ளூர், திருத்தணி, செங்குன்றம், கும்மங்களம் உள்ளிட்ட பகுதிகளில் உள்ள கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள், ஆவின் பாலகங்கள் மற்றும் கூட்டுறவு சூப்பர் மார்க்கெட்களில் அரிசி விற்பனை செய்யப்படுகிறது.

பொதுமக்கள் தங்களுக்கு அருகிலுள்ள விற்பனை மையங்களில் கிலோ ரூ.30க்கு சன்ன ரக அரிசியைப் பெற்றுக் கொள்ளலாம் என கூட்டுறவுத்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஆட்டோ, கால் டாக்ஸி ஓட்டுநர்கள் மீட்டர் கட்டணத்தை உயர்த்த கோரி உண்ணாவிரதம்



சென்னை, அக்21, தமிழ்நாடு ஆட்டோ, கால் டாக்ஸி மற்றும் வாடகை வாகன ஓட்டுநர்கள் ஒருங்கிணைந்த குழு சார்பில்தமிழக அரசு மற்றும் போக்குவரத்து துறையை கண்டித்தும், தன்னுயிர் ஈந்த ஓட்டுநர்முகமது இப்ராஹிம் வைத்த கோரிக்கைகளை நிறைவேற்றக் கோரியும் சென்னை எழும்பூர் இராஜரத்தினம்விளையாட்டு அரங்கம் அருகில் உண்ணாவிரத போராட்டம் நடைபெற்றது. இதில் சிறப்பு அழைப்பாளராக தமிழக வாழ்வுரிமை கட்சியின் தலைவர்வேல்முருகன்சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு ஆதரவினை தெரிவித்தார்.

சங்க பொதுச்செயலாளர் வெற்றிவேல் பேசியதாவது: கடந்த 14 ஆண்டுகளாக திருத்தப்படாதஆட்டோ மீட்டர் கட்டணத்தை உடனடியாக உயர்த்த வேண்டும். பர்மிட் இல்லாத பைக் டாக்ஸிகளை தடை செய்ய வேண்டும். 'விடியல் பயணம்' இலவசபேருந்துதிட்டம்வந்ததில் இருந்து ஆட்டோ ஓட்டுநர்கள் தொழில் நஷ்டம் அடைந்து வருகிறோம். எனவே விடியல் பயண திட்டத்தை முதல்வர் மறுபரிசீலனை செய்ய வேண்டும்.சமீபத்தில் உயிர் நீத்த ஓட்டுநர் முகமது இப்ராஹிம் வைத்த கோரிக்கைகள் அனைவரும் அறிந்ததே. இதுபோல ஒவ்வொரு ஓட்டுநரும் உயிர்விடும் நிலை உள்ளது. எனவே அரசு கோரிக்கைகளை நிறைவேற்றும் என நம்புகிறோம்" என்றார்.

வீணாகும் குடிநீர் அலட்சியம் காட்டும் திருவாலங்காடு வட்டார வளர்ச்சி அலுவலர்கள்

திருவள்ளூர் மாவட்டம், திருவாலங்காடு ஒன்றியம், சின்ன களக்காட்டூர் பள்ளத் தெருவில் குடிநீர் குழாய் உடைந்து, குடிநீர் வீணாக வீடுகளின் வழியே செல்கிறது இந்த குடிநீர் குழாய் உடைந்து சுமார் 6 மாதங்கள் ஆகியும் இதுவரை சரி செய்யப்படவில்லை.

இதனை சரி செய்து தரக்கோரி கிராம மக்கள் வட்டார வளர்ச்சி அலுவலரிடம் மனு அளித்தும், தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு புகார் தெரிவித்தும், இதுநாள் வரை சரி செய்யப்படவில்லை.

இதனால் வட்டார வளர்ச்சி அலுவலர் மீது கிராம மக்கள் புகார் தெரிவிக்கின்றனர். எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடனடியாக உடைந்த குடிநீர் குழாயை சரி செய்து, வீணாகும் குடிநீரை பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்

ஆரல்வாய்மொழியில் மர்ம விலங்கு கடித்து மாடு பலி; சிறுத்தை நடமாட்டமா?

வனத்துறை நடவடிக்கை எடுக்க கோரிக்கை



நாகர்கோவில், அக்.21 ஆரல்வாய்மொழி காணியாளம்மன் கோவில் அருகே வாணிப் பொத்தை என்ற பகுதி உள்ளது. இது பூதப்பாண்டி வனச்சரக பகுதிக்கு உட்பட்டதாகும். சுற்றுவட்டாரபகுதிகளை சேர்ந்த பொதுமக்கள், விவசாயிகள் தங்கள் வளர்த்த ஆடுகள் மற்றும் மாடுகளை வாணிப் பொத்தை பகுதியில் மேய்ச்சலுக்கு விடுவது வழக்கம்.

இந்த நிலையில் கடந்த 18ஆம் தேதி ஞாயிற்றுக் கிழமை மிஷன் காம்பவுண்ட் பகுதியை சேர்ந்த ஜான்சன் (59) என்பவருக்கு சொந்தமான மாடுகள் அந்த பகுதியில் மேய்ந்து கொண்டு இருந்தன. அவற்றில் ஒரு மாடு வீட்டிற்கு திரும்பவில்லை. நேற்று முன்தினம் காலையில் ஜான்சன் அதை தேடி சென்றார். அப்போது மாடு இறந்து கிடந்தது. மர்ம விலங்கு மாட்டை கழுத்தில் கடித்து உடலின் ஒரு பகுதியை தின்றுள்ளது.

ஏற்கனவே செண்பகராமன் புதூர் பகுதியில் சிறுத்தை நடமாட்டம் உள்ளது என்று பொதுமக்கள் கூறி வந்தனர். மர்ம விலங்கு கடித்து சில கால்நடைகளும் இறந்துள்ளன. இதையடுத்து வனத்துறையினர்அப்பகுதியில் சிசிடிவி கேமராக்களை பொருத்தி கண்காணித்து வந்தனர். பிறகு அங்கு நடமாடியது காட்டுப் பூனை என வனத்துறை அதிகாரிகள் தெரிவித்தனர். இந்த நிலையில் தற்போதும் கண்காணிக்கப்பட்டு வருகிறது என வனத்துறை அறிவித்துள்ளது.

வாணிப்பொத்தை பகுதியும் செண்பகராமன் புதூருக்கு மிக அருகில் தான் உள்ளது. எனவே அங்கு நடமாடிய மர்ம விலங்குதான் இந்த மாட்டை கடித்துக் கொன்றிருக்கலாம் எனவும், மர்ம விலங்கு சிறுத்தையாகத்தான் இருக்கும் என வும் பொதுமக்கள் மற்றும் விவசாயிகளை நம்புகின்றனர். எனவே வனத்துறையினர் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்எனகோரிக்கை எழுந்துள்ளது.

துணை ஜனாதிபதி சி.பி.ராதாகிருஷ்ணன் பிறந்தநாள்: திருப்பூரில் நலத்திட்ட உதவிகள் வழங்கி கொண்டாட்டம்



திருப்பூர், அக்.21: துணை ஜனாதிபதி சி.பி. ராதாகிருஷ்ணனின் 69வது பிறந்தநாளை முன்னிட்டு, திருப்பூர் வடக்கு மாவட்ட பாஜக சார்பில் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன. மாவட்டச் செயலாளர் கார்த்தி ஏற்பாட்டில், மாவட்டத் தலைவர் கே.சி.எம்.பி. சீனிவாசன் திருப்பூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் பிறந்த குழந்தைகளுக்கு தங்க மோதிரங்கள், பெட்டகங்கள், செவிலியர்களுக்குச் சேலைகள் மற்றும் பொதுமக்களுக்கு அன்னதானம் வழங்கினார். மேலும், 20க்கும் மேற்பட்டோர் ரத்த தானம் செய்தனர்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய சீனிவாசன், துணை ஜனாதிபதி சி.பி. ராதாகிருஷ்ணன் இந்தியாவுக்குப் பெருமை சேர்க்கும் வகையில் செயல்பட்டு வருவதாகவும், அவர் பல்லாண்டு வாழ வாழ்த்துவதாகவும் தெரிவித்தார்.

நாம் தமிழர் கட்சியின் தாராபுரம் வேட்பாளர் கைது செய்யப்பட்டதைக் கண்டித்த அவர், கருத்துச் சுதந்திரத்தை கைது நடவடிக்கைகள் மூலம் ஒடுக்கக் கூடாது என்றார்.

தமிழக அரசு பொறுமையுடனும் சகிப்புத்தன்மையுடனும் செயல்பட வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

மேலும், திருப்பூரில் மின்தடையால் தொழில்கள் பாதிக்கப்படுவதாகவும், மழைக்காலத்தில் சாலைகள் குண்டும் குழியுமாக இருப்பதால் அவற்றைச் சீரமைத்து மக்கள் நலனில் அரசு கவனம் செலுத்த வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

நீரை சேமிப்போம்!
மரங்களை வளர்ப்போம்!
பூமிக்கு உயிர் கொடுப்போம்!

அன்னூர் பகுதியில் த.வெ.க.சார்பில் பொதுக்கூட்டம் மற்றும் நலத்திட்ட உதவிகள்



கோவை அக்:21 கோவை மாவட்டம் அன்னூர்கிழக்கு ஒன்றியம்சார்பில் சாதனை விளக்க பொதுக்கூட்டம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா கரியாம் பாளையம் த்தில் நடந்தது.இக் கூட்டத்தில் கால் நடை பராமரிப்பு துறை அமைச்சர் கமலி கலந்து கொண்டு 950,பேருக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.பின்பு அவர் பேசுகையில் மதுராந்தகம்,தாராபுரம் ஆகிய தொகுதிகளில் நடந்த இடைத்தேர்தலில் த.வெ.க.வெற்றி பெற்றுள்ளது என்றால் பல சாதனைகளை த.வெ.க.அரசு செய்துள்ளது. இக்கூட்டத்தில் திருப்பூர் மேற்கு மாவட்ட செயலாளர் சங்கர்,கிழக்கு ஒன்றிய செயலாளர் அன்பழகன்,நகரச் செயலாளர் கிருஷ்ணதாஸ் ஒன்றிய செயலாளர்கள் ரஞ்சித் குமார்,விஜய், உள் பட பலர் பங்கேற்றனர்.

தைல மரங்கள் வெட்டி திருட்டு பதற்றத்தில் ஓய்வு பெற்ற தலைமை ஆசிரியர்

காவல்துறை நடவடிக்கை எடுக்கவும் வேண்டுகோள்



சிவகங்கை அக்டோபர் 21 காரைக்குடி சூடாமணிபுரம் பகுதியைச் சேர்ந்தவர் ஓய்வு பெற்ற தலைமையாசிரியர் ராமன், இவர் வாழும் காலத்தில் இயற்கை விவசாயத்தின் மீது பற்று ஏற்பட்டதால் விவசாயத்தை சார்ந்து வாழ்ந்து வந்திருக்கிறார், இந்நிலையில் ஆசிரியர் பணியில் ஓய்வு பெற்ற நிலையில் விவசாயம் செய்வதில் முனைப்பு காட்டி வந்துள்ளார், இந்த நிலையில் புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் வட்டம், ஆதனூர் கிராமத்தில், இடங்களை கிரயம் பெற்று அதில் தைல மரங்களை வளர்த்து வருகிறார், இம்மரங்களை தமிழ்நாடு அரசிற்கு சொந்தமான டிஎன்பிஎல் நிறுவனத்திற்கு அனுப்பியும் வருகிறார், இந்த நிலையில் கடந்த 16.10.2026 அன்று அவருக்குச் சொந்தமான அந்த தைல தோட்டத்திற்கு வழக்கம்போல் சென்றுள்ளார், அங்கு தைல மரங்கள் வெட்டி டாட்டா ஏசி வாகனம் மூலம் கடத்தப்பட்டதை கண்டு அதிர்ச்சி அடைந்துள்ளார், அந்த மரங்களில் எண்ணிக்கை தெரிவதற்காக ரஎண்கள் குறிக்கப்பட்டு இருந்ததால், அதில் 54 மரங்கள் வெட்டப்பட்டதை குறித்து, திருமயம் காவல் நிலையத்தில், நைனார்பட்டி, நங்கப்பட்டி பகுதியைச் சேர்ந்த சிலர் மீது புகார் அளித்துள்ளார், ஆனால் புகாரை பெற்றுக் கொண்ட காவல்துறையினர் விசாரணை என்கின்ற பெயரில் காலம் கடத்தி வருவதாக வேதனையோடு தெரிவித்த அவர், சில ஆட்களையும் காவல் துறை வசம் அடையாளம் காட்டியதாகவும், அவர்களையும் விட்டுவிட்டதாக கூறி கண்ணீர் விட்டார், இதுகுறித்து திருமயம் காவல் ஆய்வாளரிடம் கேட்கப்பட்டபோது, இது குறித்து விசாரணை மேற்கொண்டு வருவதாகவும், தற்போது மனு ரசீது வழங்க ஏற்பாடு செய்தது உள்ளதாகவும், ஓரிரு நாட்களுக்குள் நிச்சயமாக வழக்கு பதிவு செய்து, குற்றவாளிகள் கைது செய்யப்படுவார்என தெரிவித்தார்.

மாவட்ட அளவிலான கபடி போட்டியில் வெற்றி:

கன்னியாகுமரி மாநிலப் போட்டிக்கு சில்வார்பட்டி அரசு பள்ளி மாணவிகள் தேர்வு



பெரியகுளம் அக்.18 தேனி மாவட்டம் ஆண்டிபட்டி அருகே உள்ள பாரத் நிகேதன் பொறியியல் கல்லூரியில் நடைபெற்ற 2026–2027 ஆம் கல்வியாண்டிற்கான பாரதியார் தினம் மற்றும் குடியரசு தின விளையாட்டுப் போட்டிகளில், பெரியகுளம் அருகே உள்ள சில்வார்பட்டி அரசு மாதிரி மேல்நிலைப்பள்ளி மாணவிகள் கபடி போட்டியில் வெற்றி பெற்று, கன்னியாகுமரியில் நடைபெற உள்ள மாநில அளவிலான போட்டிக்கு தகுதி பெற்றுள்ளனர். தமிழக பள்ளிக் கல்வித்துறையின் விளையாட்டுப் போட்டிகளின்ஒருபகுதியாகமாவட்ட அளவில் நடைபெற்ற இப் போட்டிகளில், குறுவட்ட அளவிலான போட்டிகளில் 14, 17 மற்றும் 19 வயதுக்குட்பட்டோர் பிரிவுகளில் முதலிடம் பிடித்து வெற்றி பெற்ற மாணவிகளுக்கான கபடி போட்டிகள் நடத்தப்பட்டன. இப்போட்டிகளை உடற்கல்வி ஆய்வாளர் குபேந்திரன் தொடங்கி வைத்தார். இதில் 14 வயதுக்குட்பட்ட மாணவிகள் பிரிவில் நடைபெற்ற கபடி போட்டியில், சில்வார்பட்டி அரசு மாதிரி மேல்நிலைப்பள்ளி மாணவிகள் சிறப்பாக விளையாடி வெற்றி பெற்றனர். இதன் மூலம் அவர்கள் மாநில அளவிலான கபடி போட்டியில் பங்கேற்கும் வாய்ப்பைப் பெற்றுள்ளனர். மாணவிகள் அணியாக இணைந்து செயல்பட்டு, விளையாட்டுத் திறனையும் போட்டியில் தங்களது திறமையையும் வெளிப்படுத்தி வெற்றியைப் பதிவு செய்தனர். இதேபோல், 17 வயதுக்குட்பட்ட மாணவிகள் பிரிவில் சிலமலை அரசு மேல்நிலைப் பள்ளி மாணவிகளும், 19 வயதுக்குட்பட்ட மாணவிகள் பிரிவில் ஆண்டிபட்டி அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளி மாணவிகளும் வெற்றி பெற்று மாநில அளவிலான போட்டிக்குத் தேர்வு பெற்றுள்ளனர். மாவட்ட அளவிலான போட்டியில் வெற்றி பெற்று மாநிலப் போட்டிக்கு முன்னேறியுள்ள சில்வார்பட்டி அரசு மாதிரி மேல்நிலைப்பள்ளி மாணவிகளின் சாதனை, பள்ளிக்குப் பெருமை சேர்த்துள்ளது. மாணவிகளின் வெற்றிக்குப் பயிற்சி அளித்து உறுதுணையாக இருந்த உடற்கல்வி ஆசிரியர் ஜமின்தாரின் பங்களிப்பும் பாராட்டுக்குரியதாக அமைந்துள்ளது. மாணவிகளின்விளையாட்டுத்திறனை மேம்படுத்துவதற்காகப் பயிற்சி அளித்து, போட்டிகளில் பங்கேற்க ஊக்கமளித்த ஆசிரியர்களின் முயற்சிக்கும் இந்த வெற்றி அங்கீகாரமாக அமைந்துள்ளது. மாணவிகளின் வெற்றியைத் தொடர்ந்து, பள்ளித்தலைமை ஆசிரியர் பாண்டியன் மற்றும் சக ஆசிரியர்கள், ஊர் பொதுமக்கள் உள்ளிட்டோர் வெற்றி பெற்ற மாணவிகளையும், அவர்களுக்குப் பயிற்சி அளித்த உடற்கல்வி ஆசிரியர் ஜமின்தாரையும் பாராட்டி வாழ்த்திவருகின்றனர். மாநில அளவிலான போட்டியில் பங்கேற்க தகுதி பெற்றுள்ள சில்வார்பட்டி அரசு மாதிரி மேல்நிலைப்பள்ளி மாணவிகள், அங்கும் சிறப்பாக விளையாடி வெற்றிகளைப் பெற்று பள்ளிக்கும், தேனி மாவட்டத்திற்கும் பெருமை சேர்க்க வேண்டும் என ஆசிரியர்களும் பொதுமக்களும் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

இரணியல் அருகே கால்வாயில் அழுகிய நிலையில் கிடந்த வாலிபர் சடலம்

போலீசார் மீட்டனர்

நாகர்கோவில், அக். 21 குமரி மாவட்டம் இரணியல் அருகேஉள்ள ஆளூர் ரயில்வே பாதை அருகே கால்வாய் ஒன்று செல்கிறது. இந்த கால்வாயில் நேற்று முன்தினம் காலையில் அழுகிய நிலையில் வாலிபர் சடலம் ஒன்று காணப்பட்டது. அந்த வழியாக சென்ற சிலர் இதைக் கண்டு இரணியல் காவல் நிலையத்திற்கு தகவல் தெரிவித்தனர். இரணியல் போலீசார் மற்றும் தீயணைப்புத்துறையினர் சம்பவ இடத்திற்கு சென்று அழுகிய நிலையில் கிடந்த சடலத்தை மீட்டனர்.

பரிசோதனையில் அவரது உடலில் ரயில் மோதியதற்கான காயங்கள் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. ரயில் மோதி கால்வாய்க்குள் விழுந்து இருக்கலாம் என்ற சந்தேகத்தின் பேரில் நாகர்கோவில் ரயில்வே போலீசருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது.

2ரயில்வே போலீசார் சம்பவ இடம் சென்று அந்த சடலத்தை மீட்டு பிரேத பரிசோதனைக்காக குமரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

மேலும் இது குறித்து ரயில்வே போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணையை தொடங்கியுள்ளனர். இறந்து கிடந்தவருக்கு சுமார் 35 லிருந்து 40 வயதிற்குள் இருக்கலாம் என தெரிகிறது. அவர் யார்? எந்த ஊரை சேர்ந்தவர்? என்ற அடையாளம் தெரியவில்லை. அவரது கையில் எம் கே என்று பச்சை குத்தப்பட்டுள்ளது. தண்டவாளத்தை ஒட்டி நடந்து செல்லும் போது ரயில் மோதி தூக்கி வீசப்பட்டு கால்வாய்க்குள் விழுந்திருக்கலாம் என கூறப்படுகிறது.

இது தொடர்பாக போலீசார் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

ஈரோடு ஆட்சியர் அலுவலகத்தில் 23 ந் தேதி வேளாண் குறைதீர்க்கும் நாள் கூட்டம்

ஈரோடு அக் 21

ஈரோடு கலெக்டர் அலுவலக வளாகத்தில் ஒவ்வொரு மாதமும் வேளாண் குறை நாள் கூட்டம் நடந்து வருகிறது. இதில் ஈரோடு மாவட்டத்தை சேர்ந்த விவசாய சங்க பிரதிநிதிகள் கலந்து கொண்டு விவசாயம் சம்பந்தப்பட்ட கோரிக்கைகளை கூறுவார்கள். அப்போது மாவட்ட ஆட்சியர் மற்றும் விவசாய துறை அதிகாரிகள் அரசின் சலுகைகள் மற்றும் அரசு அறிவித்துள்ள திட்டங்கள் குறித்து எடுத்து கூறி இதை விவசாயிகள் பயன்படுத்தி கொள்ளுமாறு கேட்டுக் கொள்வார்கள்.

இதேபோல் இந்த மாதமும் வருகிற 23 ந் தேதி வேளாண் குறைதீர்க்கும் நாள் கூட்டம் ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் நடைபெற உள்ளது. இதுகுறித்து ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் கந்தசாமி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது ஈரோடு மாவட்டத்தில் அக்டோபர் மாதத்திற்கான வேளாண் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சியர்அலுவலகஇரண்டாம் தள கூட்ட அரங்கில் வருகிற 23 ந் தேதி (வெள்ளிக்கிழமை) காலை 10.00 மணிக்கு நடைபெற உள்ளது. அன்றைய தினம் காலை 10.00 மணி முதல் 11.30 வரை மனுக்கள் பெறப்படும். 11.30 மணி முதல் 12.30 மணி வரை விவசாய சங்கப் பிரதிநிதிகள் விவசாயம் தொடர்பான தங்களது பகுதி பிரச்சினைகள் குறித்து கருத்துக்கள் தெரிவிக்கலாம். பிற்பகல் 12.30 முதல் 1.30 முடிய அலுவலர்களின் விளக்கங்களும் தெரிவிக்கப்படவுள்ளது. இக்கூட்டத்தில் விவசாய பெருமக்கள் கலந்து கொண்டு பயன்பெற கேட்டுக்கொள்ளப்படுகிறது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

அமைச்சர் சம்பத் குமாரிடம், மாநில சிறுபான்மையினர் நலத்துறை விடுதி பணியாளர் சங்கத்தின் சார்பில் கோரிக்கை மனு

நிறைவேற்றித் தரவும் வேண்டுகோள்



சிவகங்கை, அக். 21

தமிழகபிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சம்பத்குமாரை, அவரது வீட்டில் சந்தித்து தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் விடுதி பணியாளர் சங்கத்தின் சார்பில் பல்வேறு கோரிக்கைகளை முன்னிறுத்து மனு அளிக்கப்பட்டது, அந்த மனுவில், மாநிலம் முழுவதும் அரசு சமூகநீதி மாணவ மாணவியர் விடுதிகளில் உள்ள இரவு காவலர் பணியிடங்களுக்கு மாவட்ட பணி மூப்பு பட்டியலில் உள்ள சமையலர்களைகொண்டு இதுவரை நடைமுறையில் உள்ளது போன்று பணி மூப்பு சமையலறை, சமையலர்களை இரவு காவலர் பணி மாற்றம் செய்திட கோருவது, விடுதியில் உள்ள சமையலர் காலிப் பணியிடங்களை நிரப்பிட வேண்டுவது, விடுதிகளில் பணிபுரியும் தூய்மை பணியாளர்களுக்கு தொகுப்பூதியத்தில் இருந்து காலமுறை ஊதியம் வழங்க கோருவது, அனைத்து மாவட்ட அலுவலகங்களிலும் காலிப் பணியிடங்களாக உள்ள அலுவலக உதவியாளர் பதிவறை எழுத்தர், ஈப்பு ஓட்டுநர் காலிப்பணியிடங்களை , பணி மூப்பு சமையலறை, சமையலர்களைகொண்டு நிரப்பிட வேண்டுவது, மாநிலம் முழுவதும் 2020 ஆம் ஆண்டு பதவியேற்று கொண்ட சமையலர்களுக்கு செய்முறை தேர்வு நடைபெற்றது, இந்தத் தேர்வில் தேர்ச்சி பெறாத சமையலர்களுக்கு மறு வாய்ப்பு வழங்கிட கோருவது, பணி மூப்பு சமையலர்களை, இரவு காவலர்களாக அமர்த்துவது, என பல்வேறு கோரிக்கைகள் அந்த மனுவில் கோரப்பட்டுள்ளது. மனுவைப் பெற்றுக் கொண்ட மாண்புமிகு அமைச்சர் சம்பத்குமார் நிறைவேற்றுத் தருவதாகவும் உறுதிய ளித்துள்ளார். இதில் மாநில மையத் தலைவர் முனீஸ்வரன், மாநில மையச் செயலாளர் மீனாட்சி சுந்தரம், மாநிலமையப் பொருளாளர் நவீன் குமார் மற்றும் பொறுப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்

வேலூர் சாய்நாதபுரத்தில் 'ஹார்ட் லூச்' உணவகத்தின் பிரம்மாண்ட திறப்பு விழா!

வேலூர் அக்21

வேலூர்: வேலூர் சாய்நாதபுரம், டி.கே.எம். கல்லூரி பேருந்து நிறுத்தம் அருகே 'ஹார்ட் லூச்' (hART LOUCIE) BBQ உணவகம் இன்று (அக். 19) பிரம்மாண்டமாகத் திறக்கப்பட்டது. இந்தத் திறப்பு விழாவில் சிறப்பு விருந்தினர்களாக பூமிநாதன் பி., எஸ்.ஆர். கே.அப்புமற்றும்ஹலால் பிராய்லர்ஸ் நிறுவனத்தைச் சேர்ந்த பி. அதாவுல்லா ஆகியோர் கலந்து கொண்டனர். இந்த உணவகத்தில் BBQ உணவுகள், ஷவர்மா, பாஸ்தா மற்றும் மொஜிட்டோ உள்ளிட்ட பல்வேறு உணவு வகைகள் வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்படுகின்றன. தரமான உணவு வகைகளைச் சுவையான முறையில் வழங்கும் நோக்கில் இந்த உணவகம் தொடங்கப்பட்டுள்ளது. மேலும் உரிமையாளர் தினேஷ் விழாவிற்கான மிகச் சிறப்பாக ஏற்பட்டினை செய்திருந்தார்.



சேகோசர்வ் சங்க உறுப்பினர்கள் மற்றும் வியாபாரிகள் உடனான கலந்தாலோசனை கூட்டம்



சேகோசர்வ் என்பது சேலம் ஸ்டார்ச் மற்றும் சேகோ உற்பத்தியாளர்கள் சேவை தொழில் கூட்டுறவு சங்கம் ஆகும் .இது 1961 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்களின் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டு 1981 ஆம் ஆண்டு முதல் வியாபாரத்தை தொடங்கியது. மரவள்ளி கிழங்கிலிருந்து ஸ்டார்ச் மாவு மற்றும் சேகோ உற்பத்தி செய்யும் உற்பத்தியாளர்கள் தயார் செய்த பொருட்களை இடைத்தரவுகளின் ஆதிக்கம் இல்லாமல் சந்தைப்படுத்துதலில் சேகோ சர்வ் முக்கிய பங்கு வகிக்கிறது. சேகோசர்வ் அதன் உறுப்பினர்களுக்கு தேவையான நிதி மற்றும் சேமிப்பு கிடங்கு சேவைகளை வழங்குகிறது. தற்போது இந்த சங்கத்தில் 327 உறுப்பினர்கள் மற்றும் 175 பதிவு பெற்ற வியாபாரிகள் உள்ளனர். இந்த சேகோ சர்வ் சங்கமானது உறுப்பினர்கள் மற்றும் வியாபாரிகளுக்காக தொடங்கப்பட்ட தொழில் கூட்டுறவு சங்கமாகும். உறுப்பினர்கள் மற்றும் வியாபாரிகள் அனைவரும் தங்களது அனைத்து ஐவ்வரிசி மற்றும் ஸ்டார்ச் உற்பத்தி பொருட்களை சேகோசர்வ் மூலமாக மட்டுமே விற்பனை மற்றும் கொள்முதல் செய்வதன் மூலம் சேகோ சர்வ் சங்கம் வளர்ச்சி பெறுகிறது. இதனால் உறுப்பினர்கள் வியாபாரிகள் மற்றும் விவசாயிகள் பயன் பெறுவார்கள். ஐவ்வரிசி உற்பத்தியாளர்கள் அனைவரும் ஒற்றுமையாக செயல்பட்டு ரசாயன கலப்படம் இல்லாத தரமான ஜவ்வரிசி நைட்///தயாரிக்கும் போது விலை வீழ்ச்சி ஏற்படாமல் ஐவ்வரிசிக்கு நல்ல விலை கிடைக்கும் வகையில் இந்த சங்கம் செயல்பட்டு வருகிறது. இதன் மூலம் மரவள்ளிக்கிழங்கு விவசாயிகளுக்கு நல்ல விலை கிடைக்கவும் வழி வகை கிடைக்கிறது. உணவு பாதுகாப்புத்துறை மற்றும்தமிழ்நாடு மாசுகட்டுப்பாடு வாரியம் மற்றும் தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககம் ஆகிய துறைகளின் விதிகளுக்கு உட்பட்டு உற்பத்தி செய்ய வேண்டும் எனவும், தொழிற்சாலைகளை ஆய்வு செய்யும் போது விதிமீறல்கள் ஏதேனும் கண்டறியப்பட்டால் தக்க நடவடிக்கை எடுக்கப்படும் . இவ்வாறு மாவட்ட ஆட்சித் தலைவர் இளம் பகவத் தெரிவித்தார். இதனைதொடர்ந்துசேகோ உற்பத்தியாளர்கள், உறுப்பினர்கள், வியாபாரிகள் தங்களது கருத்துக்களை தெரிவித்தனர். மேலும் இக்கூட்டத்தில் உணவு பாதுகாப்பு அலுவலர் மற்றும் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்துறை அலுவலர், தோட்டக்கலைத்துறை மற்றும் விவசாயத்துறை அலுவலர்கள் ஆகியோர் சேகோ தொழிற்சாலைகளில் தங்களது துறை சார்ந்த விதிகளை பின்பற்றுவது குறித்தும் எடுத்து கூறினர்.

திண்டுக்கல் செம்பட்டியில் போலி இன்ஸ்டாகிராம் கணக்கு மூலம் ஆயுதப் புகைப்படம் வெளியிட்ட இளைஞர் கைது, வாள் பறிமுதல்!



திண்டுக்கல், அக்.21

திண்டுக்கல் மாவட்டம், செம்பட்டி காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதியில், ரௌடி அலெக்ஸ் பாண்டியனின் புகைப்படங்களைப் பயன்படுத்தி போலி இன்ஸ்டாகிராம் கணக்கு உருவாக்கி, அரிவாள் உள்ளிட்ட பயங்கர ஆயுதங்களுடன்இருப்பதுபோன்ற புகைப்படங்களைப் பதிவிட்டு பொதுமக்களை அச்சுறுத்தியதாக மதுரை மாவட்டம் வாடிப்பட்டி பகுதியைச் சேர்ந்த ஸ்ரீரில் குமார் (20) என்பவரை போலீசார் கைது செய்தனர்.திண்டுக்கல்மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஜெயக்குமார்ஐபிஎஸ்உத்தரவின்பேரில், சைபர் கிரைம் போலீசார் உதவியுடன் மேற்கொண்ட விசாரணையில், போலி கணக்கை உருவாக்கியவர் அடையாளம் காணப்பட்டார். இதையடுத்து, நேற்று கைது செய்யப்பட்ட அவரிடமிருந்து ஒரு வாளையும் போலீசார் பறிமுதல் செய்தனர். கைது செய்யப்பட்ட வரை நீதிமன்றக் காவலுக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. சமூக வலைதளங்களில் போலி கணக்குகள் உருவாக்கி, பிறரது புகைப்படங்களைத் தவறாகப் பயன்படுத்தி அச்சுறுத்தும் வகையில் பதிவிடுவோர் மீது கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஜெயக்குமார் ஐபிஎஸ் எச்சரித்துள்ளார்.



தக்கலை இலக்கிய வட்டம் சார்பில் 2 நூல்கள் வெளியீட்டு விழா

தக்கலை, அக்.21

எழுத்தாளர் ஆஸ்வால்ட் எழுதிய பூநறவு பருகும் தேவதைக்குருவி மற்றும் முனைவர் பிரபாகரன் எழுதிய திருக்குறள் யாப்பியல் ஆகிய இரண்டு நூல்களின் வெளியீட்டு விழா எழுத்தாளர் ஜவகர் தலைமையில் நடைபெற்றது. தமிழாசிரியர் கிறிஸ்டோபர் முன்னிலை வகித்தார். ராஜன் வரவேற்றார்.

நூல்களை தமிழ்நாடு அரசின் தமிழ்ச்செம்மல் விருது பெற்ற எழுத்தாளர் குமரி ஆதவன் மற்றும் மகளிர் கிறிஸ்தவ கல்லூரி தமிழ்த்துறை இணைப் பேராசிரியர் முனைவர் ஷீஜா ஆகியோர் வெளியிட்டனர். எழுத்தாளர் கலைவாணன் மற்றும் மதன்குமார் பெற்றுக்கொண்டனர். பேராசிரியர்கள் முனைவர் ராஜேஷ், முனைவர் பியூலா, முனைவர் நடசிவகுமார், சப்திகா ஆகியோர் நூலாய்வுரை வழங்கினர். நிறைவாக நூலாசிரியர்கள் ஏற்புரை வழங்கினர். நிகழ்ச்சியை தக்கலை இலக்கிய வட்டம் ஒருங்கிணைத்தது.

பெரியார் அறிவுலகம் திறப்பு குறித்த திமுக தலைவரின் பதிவுக்கு தமிழ்நாடு காங்கிரஸ் மாநில பொதுச்செயலாளர் பதிலடி



கோவை அக்:21

தமிழ்நாடு அரசால் கோவையில் கட்டப்பட்டுள்ள பெரியார் அறிவுலகம் மதச்சார்பற்ற சமூகநீதி வெற்றி கூட்டணி ஆட்சியின் முதலமைச்சர் ஜோசப் விஜய் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

ஆனால் அண்ணா அறிவாலயத்தை தலைமையிடமாக கொண்டு இயங்கும் திமுகவின் தலைவர் முன்னாள் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இந்த திறப்பு குறித்து அவரது வழக்கமான புலம்பலை வெளிப்படுத்தியுள்ளார்.

அண்ணா அறிவாலயம் என்பதை இதில் ஏன் அழுத்தமாக குறிப்பிடுகிறோம் என்றால்,அங்கு தந்தை பெரியார் அவர்களுக்கு சிறு இடம் கூட இல்லை என்பதை ஸ்டாலின் அவர்களுக்கும் அவரது உடன்பிறப்புகளுக்கும் நினைவூட்டலாம் என்பதற்காகத்தான்.

ஆனால் எந்த திட்டம் அல்லது கட்டமைப்பு எந்த ஆட்சியில் உருவாக்கப்பட்டாலும் அது பொதுமக்களின் பணத்தில் பொதுமக்களின் பயன்பாட்டிற்கானது,அந்த பெருமையை யாரும் சொந்தம் கொண்டாட முடியாது என்பதை உணர்ந்தமுதலமைச்சராக மதச்சார்பற்ற சமூகநீதி வெற்றி கூட்டணியின் முதலமைச்சர் விஜய் அவர்கள் கடந்த ஆட்சியில் கொண்டுவந்த அத்துனை மக்கள் நலத்திட்டங்களையும் எந்த ஈகாவும் இல்லாமல் செயல்படுத்தி வருகிறார். என்று தெரிவித்தார்.

தின தமிழ் நாளிதழில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்!

விஜயதசமியை முன்னிட்டு பள்ளிகளில் குழந்தைகள் சேர்க்கை ; குவிந்த பெற்றோர்



சிவகங்கை மாவட்டம் காரைக்குடி விஜயதசமி திருநாளை முன்னிட்டு சிவகங்கை மாவட்டம் காரைக்குடிம கரிஷி வித்யா மந்திர் பள்ளியில்சேர்க்கைகள்நடைபெற்றன.

இன்றைய நாளில் குழந்தைகளை பள்ளியில் சேர்த்தால் கல்வியில் சிறந்து விளங்குவார்கள் என்பது ஐதீகம். இதனால் இன்றுஅதிகாலைமுதலே காரைக்குடி, சிவகங்கை, தேவகோட்டை, இளையான்குடி உள்ளிட்ட பகுதிகளில் உள்ள பள்ளிகளில்பெற்றோர்கள்தங்கள் குழந்தைகளுடன் நீண்ட வரிசையில் காத்திருந்தனர்.

சிறப்பு பூஜைகள்:

பல பள்ளிகளில் குழந்தைகளுக்கு முதல் எழுத்தான "அ" என்ற எழுத்தை எழுத வைத்து சேர்க்கை தொடங்கப்பட்டது. ஆசிரியர்கள் குழந்தைகளின் கையை பிடித்து அரிசியில் எழுத வைத்தனர். சில பெற்றோர்கள் குழந்தைகளை கோவில்களில் வைத்து வித்யாரம்பம் செய்த பின்னர் பள்ளிக்கு அழைத்து வந்து சேர்த்தனர்.

அரசு மற்றும் தனியார் பள்ளிகள்:

அரசு பள்ளிகள், தனியார் மெட்ரிக் பள்ளிகள், சிபிஎஸ்இ பள்ளிகள் என அனைத்து பள்ளிகளிலும் இன்று சிறப்பு சேர்க்கை நடைபெற்றது. புதிதாக சேர்ந்த குழந்தைகளுக்கு இனிப்புகள் மற்றும் பரிசுகள் வழங்கப்பட்டன.

இன்று ஒரே நாளில் சிவகங்கை மாவட்டத்தில் மட்டும் ஆயிரக்கணக்கான மாணவர்கள் புதிதாக பள்ளியில் சேர்ந்துள்ளதாக கல்வித்துறை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

சேலம் இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் அடிப்படை வசதிகள் குறித்து ஆய்வு



சேலம்: தமிழக முதல்வர் பொதுமக்கள் பயன் பெறும் வகையில் பல்வேறுநலத்திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார். இதன் ஒரு பகுதியாக, சேலம் மாவட்டம் ஓமலூர்வட்டம்பாப்பம்பாடி இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாமில் வசிப்போரின் வாழ்வாதாரம் மற்றும் அடிப்படை வசதிகள் குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

மேலும், குடிநீர், தெருவிளக்கு, கழிவுநீர் வடிகால், மயான வசதி, அத்தியாவசியப் பொருட்கள் மற்றும் இலவசமின்சாரம் உள்ளிட்ட அடிப்படை வசதிகளை முறையாக வழங்க அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டது.

தொடர்ந்து, சேலம் மேற்கு வட்டம் சித்தர் கோவில் பகுதியில் உள்ள இலங்கைத் தமிழர் முகாமிலும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இங்கு 56 ஆண்கள், 47 பெண்கள், 29 குழந்தைகள் என மொத்தம் 132 பேர் வசிக்கின்றனர். ரூ.3.30 கோடி மதிப்பில் 12 தொகுப்புகளாக 48 வீடுகள் கொண்ட ஒருங்கிணைந்த குடியிருப்புகள் கட்டப்பட்டு வரும் பணிகளை விரைந்து முடிக்க அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டது.

இந்த ஆய்வில் வீர பாண்டி சட்டமன்ற உறுப்பினர் பழனிவேல், மேட்டூர்சார்ஆட்சியர்அம்ருதா உள்ளிட்ட அதிகாரிகள் பங்கேற்றனர்.



சேலம் மாவட்ட கூட்டுறவுத் துறையின் சார்பில் குடும்ப அட்டைதாரர்களுக்கு 5 கிலோ விதம் "ஏ" ரக சன்ன அரிசி கிலோ ஒரு 30/ என்ற விலையில் விற்பனை.

பொங்கல் நெசவுக் கூலி உயர்வு: விசைத்தறி சங்கங்கள் வரவேற்பு; 2 மாத அவகாசம் கோரிக்கை



ஈரோடு அக் 21

பொங்கல் திருநாளை முன்னிட்டு பொதுமக்களுக்கு வழங்கப்படும் இலவச வேஷ்டி, சேலை உற்பத்திக்கான நெசவுக் கூலியை உயர்த்தி தமிழக அரசு அரசாணை வெளியிட்டுள்ளதற்கு தமிழ்நாடு விசைத்தறி சங்கங்களின் கூட்டமைப்பு வரவேற்பு தெரிவித்துள்ளது. அதேசமயம், உற்பத்திப் பணிகளை முடிக்கக் கூடுதலாக இரண்டு மாத கால அவகாசம் வழங்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளது.

இலவச வேஷ்டி, சேலை உற்பத்திக்கான கூலியை நிர்ணயிக்கதமிழகஅரசுஅமைத்த ஐவர் குழுவிடம், கடந்த செப்டம்பர் 15ஆம் தேதி கூட்டமைப்பு சார்பில் விரிவான கோரிக்கை மனு அளிக்கப்பட்டது. அதில், வேஷ்டி ஒன்றுக்கு ரூ.24.48, சேலை ஒன்றுக்கு ரூ.56.42 என கூலி நிர்ணயம் செய்ய வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது.

இதையடுத்து, அக்டோபர் 16ஆம் தேதி தமிழக அரசு வெளியிட்ட அரசாணையில், வேஷ்டி ஒன்றுக்கு ரூ.19.04, சேலை ஒன்றுக்கு ரூ.45.76 என கூலி உயர்வு அறிவிக்கப்பட்டுள்ளது.

விசைத்தறி நெசவாளர்களின் வாழ்வாதாரத்தைக் கருத்தில் கொண்டு கூலி உயர்வை அறிவித்த தமிழக முதலமைச்சர் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் ஆகியோருக்கு கூட்டமைப்பு நன்றி தெரிவித்துள்ளது.

அதேவேளையில், தற்போதைய பணவீக்கம், மின்கட்டணம் மற்றும் உதிரி பாகங்களின் விலை உயர்வு ஆகியவற்றைக் கணக்கிடும் போது அறிவிக்கப்பட்டுள்ள கூலி உயர்வு போதுமானதாக இல்லை என்றும் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது. பாரம்பரிய விசைத்தறித் தொழிலையும் நெசவாளர் குடும்பங்களின் பொருளாதார நிலையையும் பாதுகாக்கும் வகையில், தங்களது கோரிக்கையைப் பரிசீலித்து மேலும் கூலியை உயர்த்தி வழங்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளது. மேலும், நிர்ணயிக்கப்பட்ட உற்பத்தி இலக்கை வரும் டிசம்பர் மாத இறுதிக்குள் முழுமையாக நிறைவேற்றுவது விசைத்தறியாளர்களுக்குச் சவாலாக இருப்பதால், பொங்கல் வேஷ்டி, சேலை உற்பத்திக்கான கால அவகாசத்தை கூடுதலாக இரண்டு மாதங்கள் நீட்டித்து வழங்க வேண்டும் என்றும் தமிழக அரசுக்கு கூட்டமைப்பு வேண்டுகோள் விடுத்துள்ளது.

கூலி உயர்வை அறிவித்த தமிழக அரசுக்கு மீண்டும் நன்றி தெரிவித்துள்ள கூட்டமைப்பு, நெசவாளர்களின் நலன் கருதி கூடுதல் கோரிக்கைகளையும் அரசு பரிசீலிக்கும் என நம்பிக்கை தெரிவித்துள்ளது.

ஈரோட்டில் கிரெடாய் அமைப்பின் வீடு வீட்டுமனை அடுக்குமாடி குடியிருப்பு விற்பனை கண்காட்சி

அமைச்சர் தொடங்கி வைத்தார்



ஈரோடு, அக்.21

இந்திய நிறுவன கட்டுமான கூட்டமைப்பான கிரெடாய் அமைப்பின் சார்பில் ஆண்டு தோறும் வீடு, வீட்டு மனை, அடுக்குமாடி குடியிருப்பு கண்காட்சி நடத்தப்பட்டு வருகிறது.

இதன் தொடர்ச்சியாக தற்போது ஈரோடு பெருந்துறை ரோடு பரிமளம் மகாலில் 40க்கும் மேற்பட்ட அரங்குகளுடன் வீடு, வீட்டுமனை, அடுக்குமாடி குடியிருப்புகளின் விற்பனை கண்காட்சி இரண்டு நாட்கள் நடந்தது. இதன் தொடக்க விழாவுக்கு ஈரோடு மாவட்ட ஆட்சியர் கந்தசாமி தலைமை தாங்கினார். கிரெடாய் தலைவர் குமரேசன் வரவேற்றார். கிரெடாய் மாநில இணைசெயலாளர் சதாசிவம், ஈரோடு செயலாளர் ராஜன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

விழாவில் அமைச்சர் விஜய்பாலாஜி கலந்து கொண்டு கண்காட்சியை ரிப்பன் வெட்டியும் குத்து விளக்கேற்றியும் துவக்கி வைத்தார். பின்னர், ஒவ்வொரு அரங்குகளாக சென்று கட்டுமான நிறுவனங்கள் மாதிரி குடியிருப்புகள், தற்போது விற்பனைக்கு இருக்கும் அடுக்குமாடி குடியிருப்புகள், தனி வில்லா வீடுகள், புதிய கட்டுமானத்திற்கான நவீன சுதவுகள், பாரம்பரிய அலங்காரத்தில் கட்டப்படும் மாதிரி குடியிருப்புகள் போன்ற வற்றை பார்வை யிட்டு, கேட்டறிந்தார். இந்த கண்காட்சியில், சண்முகன் எம் எல் ஏ, ஸ்டேட் பேங்க் பொது மேலாளர் ஹரிதா பூர்ணிமா, ஒளிரும் ஈரோடு முன்னாள் தலைவர் சின்னசாமி, அனைத்து வணிகர் சங்கங்களின் கூட்டமைப்பின் தலைவர் ராஜமாணிக்கம், பொது செயலாளர் ரவி ச்சந்திரன், பொருளாளர் முருகானந்தம், கிரெடாய் பொருளாளர் ஈஸ்வர மூர்த்தி, கண்காட்சி ஒருங்கிணைப்பாளர்கள் ஜெயபிரசாத் அருணாசலம், மோகன் ராஜ் சந்திர சேகரன் கைலாசபதி ஈஸ்வரன். பாலசுப்பிரமணியம், மாணிக்கம், சேது ராமலிங்கம் உட்பட பலர் கலந்து கொண்டனர். இந்த கண்காட்சி அரங்கிலேயே எளிய நடைமுறைகள் மூலம் தேசிய மய மாக்கப்பட்ட மற்றும் தனியார் வங்கிகள் மூலம் உடனடி கடன் வசதி வழங்க தனி அரங்கு அமைப்பட்டி ருந்தது.



புதூரில் நவராத்திரி உற்சவ விழாவை முன்னிட்டு நரகாசுரனை வதம் செய்த ஸ்ரீ ராமலிங்க சௌடேஸ்வரி அம்மன்

விளாத்திகுளம் அக். 21

கொட்டும் மழையில் விண்ணை பிளந்த மின்னல்களுக்கு இடையே வானவேடிக்கையுடன் நடைபெற்ற சூரசம்காரம். தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளம் அருகே உள்ள புதூரில் அமைந்துள்ள ஸ்ரீ ராமலிங்க சௌடேஸ்வரி அம்மன் திருக்கோவில் நவராத்திரி உற்சவ விழா குத்து விளக்கு பூஜைகளுடன் தொடங்கியது, அதனைத் தொடர்ந்து ஸ்ரீ ராமலிங்க சௌடேஸ்வரி அம்மன் நரகாசுரனை வதம் செய்யும் நிகழ்ச்சி வெகு விமர்சையாக நடைபெற்றது. நிகழ்ச்சியை முன்னிட்டு அம்மனுக்கு சிறப்பு அபிஷேகங்கள் மற்றும் ஆராதனை நடைபெற்றது, பின்னர் கோவில் வளாகத்தில் இருந்து பெண்களின் நாதஸ்வர மங்கல இசை மற்றும் வான வேடிக்கையுடன் ஸ்ரீ ராமலிங்க சௌடேஸ்வரி அம்மன் கையில் சூலத்துடன் நரகாசுரனை வதம் செய்யும் நிகழ்வு புதூர் முக்கிய விதி வழியாக சுற்றி வந்து புதூர் காவல் நிலையம் முன்பாக நரகாசுரனின் தலையை சூலத்தால் வதம் செய்யும் நிகழ்ச்சி நிறைவடைந்தது. சிங்கமுக வாகனத்தில் தவத்திலிருந்து ஸ்ரீ ராமலிங்க சௌடேஸ்வரி அம்மனையும் அவரது தங்கை துர்க்கையம்மனையும் வம்பிழுத்த நரகாசுரன் கூட்டத்தை, கொட்டும் மழையிலும் விண்ணைப் பிளந்த மின்னல்களுக்கு இடையே ஸ்ரீ ராமலிங்க சௌடேஸ்வரி அம்மன் வதம் செய்யும் நிகழ்வு நடைபெற்றது. கொட்டும் மழையையும் பொருட்படுத்தாமல் ஏராளமான பொதுமக்கள் சூரசம்கார நிகழ்ச்சியை கண்டுகளித்தனர்.


துபாயில் உலகத் தமிழ் தொழில்முனைவோர் மாநாடு: நவம்பர் 12 முதல் தொடக்கம்!

மதுரை, அக். 21:

'தி ரைஸ்' 'எழுமின்' அமைப்பு சார்பில், 17வது உலகத் தமிழ் தொழிலதிபர்கள் மற்றும் திறனாளர்கள் மாநாடு வரும் நவம்பர் 12, 13, 14 தேதிகளில் துபாய் மில் லேனியம்பிளாசாஹோட்டலில் நடைபெற உள்ளது.

தொழிலதிபர் ஷாகுல் ஹமீத்அவர்கள்தலைமை தாங்கும் இம்மாநாட்டில், 40 நாடுகளிலிருந்து 700க்கும் மேற்பட்ட வெற்றித் தமிழர்கள் பங்கேற்கின்றனர்.

இந்தியாவுக்கும் ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் ஐக்கிய அரபு அமீரகத்திற்குமான தடையற்ற வர்த்தக ஒப்பந்தப் பின்புலத்தில் இம்மாநாடு நடத்தப்படுகிறது. சிறப்பம்சங்கள்: 300 ஒப்பந்தங்கள்: பங்கேற்பாளர்களின்தொழில் தேவைகளுக்கு ஏற்ப பொருத்தமான நபர்களை முன்கூட்டியே சந்தித்து பேச ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் சுமாராக 300 வணிக ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.



நிரந்தர அலுவலகம்: உலகத் தமிழர்களின் தொழில்வணிகத் தூதரகமாகச் செயல்பட துபாயில் புதிய சிறப்பு அலுவலகம் மாநாட்டுநிறைவில் திறக்கப்படவுள்ளது. பல்வேறு துறைகள் & பேரவைகள்: உற்பத்தி, ஏற்றுமதி, ஐ.டி., கட்டுமானம், உணவுப் பொருட்கள் மற்றும் நிதித்துறையினர் பங்கேற்கின்றனர். மேலும், மருத்துவர்கள், கணினித் துறையினர், வழக்கறிஞர்கள், நிதி மேலாளர்கள்மற்றும் பெண்கள் பேரமைப்பு சார்பில் தனி மாநாடுகளும் நடைபெறுகின்றன.

பதிவு விவரங்கள்: இம்மாநாட்டில் தமிழகம் மற்றும் இந்தியாவின் பிறநகரங்களிலிருந்தும், ஐரோப்பா (சுவிட்சர்லாந்து, இங்கிலாந்து, ஜெர்மனி, பெல்ஜியம்) உள்ளிட்ட பல்வேறு நாடுகளிலிருந்தும் ஏராளமானோர்கலந்துகொள்கின்றனர் ஆர்வம் உள்ளவர்கள் www.tamilrise.org என்ற இணையதளம் மூலமாகவோ அல்லது +91 91500 60032 / 33 என்ற எண்களிலோ தொடர்பு கொண்டு பதிவு செய்து கொள்ளலாம்.

சின்னமுட்டம் துறைமுகத்தில் தொழிலாளி கொலை; மேலும் ஒருவர் கைது

கன்னியாகுமரி அக் 21

கன்னியாகுமரி சின்னமுட்டம் மீன்பிடித் துறைமுகத்தில் வடமாநில தொழிலாளி கொலை வழக்கில் ஒடிசா இளைஞர் கைது செய்யப்பட்ட நிலையில் மேலும் ஒரு குற்றவாளியை போலீசார் கைது செய்தனர்.

கன்னியாகுமரி சின்னமுட்டம் மீன்பிடி துறைமுகத்தில் ஏராளமான வடமாநில தொழிலாளர்கள் வேலை பார்த்து வருகின்றனர். கடந்த ஆகஸ்ட் மாதம் 21ம் தேதி சட்டீஸ்கர் மாநிலத்தை சேர்ந்த ஜெயந்த் என்ற வடமாநில தொழிலாளி மீன்பிடி துறைமுக வளாகத்தில் கத்தியால் குத்தி படுகொலை செய்யப்பட்டார். இது தொடர்பாக கன்னியாகுமரி போலீசார் வழக்கு பதிவு செய்து கொலையாளியை தேடி வந்தனர். இந்நிலையில் கொலை செய்யப்பட்ட ஜெயந்த் என்பவரின் மொபைல் மூலமாக போலீசாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் கொலையாளி ஒடிசா மாநிலத்தில் பதுங்கி இருப்பது தெரிய வந்தது. இதனையடுத்து தனிப்படை போலீசார் ஒடிசா சென்று தர்மானந்தா (32) என்பவரை கைது செய்து அவரிடமிருந்து ஜெயந்த்தின் செல்போனை பறிமுதல் செய்தனர். பின்னர் தர்மானந்தாவை ஒடிசா கோர்ட்டில் ஆயர்படுத்தி கன்னியாகுமரிக்கு அழைத்து வந்து விசாரணை நடத்தி கோர்ட்டில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தனர். அவரிடம் நடத்திய இக்கொலையில் மேலும் ஒருவருக்கு தொடர்பு இருப்பது தெரியவந்தது. இந்நிலையில் ஒடிசா மாநிலம் ஜெகனாத்பூர், மதனபூர் பகுதியை சேர்ந்த சனதன் மாலிக் என்பவரின் மகன் மகேஸ்வர் மாலிக் (37) என்பவரை சிறப்பு தனிப்படை போலீசார் ஒடிசா மாநிலத்தில் கைது செய்து கன்னியாகுமரி போலீசில் ஒப்படைத்தனர். போலீசார் விசாரணை நடத்தி சிறையில் அடைத்தனர்.

நித்திரவிளை அருகே வீட்டு கட்டுமானப்பணியை இரவோடு இரவாக இடித்த கும்பல்

சிசிடிவி காட்சிகள் வெளியாகி பரபரப்பு



மார்த்தாண்டம், அக்.21

நித்திரவிளை அருகே ஆலங்கோடு பகுதியை சேர்ந்தவர் எலியாஸ். இவருக்கு 7 மகள்களும் ஒரு மகனும் உள்ளனர். எலியாஸ் தனது மகள்களை திருமணம் செய்து வைத்த போது வரதட்சணையாக அவரது சொத்துக்களை இஷ்டதானமாக எழுதி கொடுத்ததாக கூறப்படுகிறது. இந்த நிலையில் எலியாஸ் இறந்து போய் உள்ளார்.

இந்த நிலையில் பியூலா ராணி என்பவர் தங்களுக்கு தந்தை எழுதி கொடுத்த இடத்தில் வீடு வைக்க முயன்றுள்ளார். இதனை எதிர்த்து கிறிஸ்து தாஸ் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளார். அந்த வழக்கு முடிவு பியுலாராணிக்கு சாதகமாக வந்துள்ளது. அந்த உத்தரவை எதிர்த்து மீண்டும் கிறிஸ்துதாஸ் வழக்கு தொடர்ந்துள்ளார். அந்த வழக்குகள் அனைத்தும் பியூலாராணிக்கு சாதகமாக தீர்ப்பு வந்ததை தொடர்ந்து பியூலாராணி பல இடங்களில் கடன் வாங்கி வீடு ஒன்றை கட்டி வந்துள்ளார். நேற்று முன்தினம் மதியம் வீட்டின் சன்சைடு காங்கிரீட் பணி நடந்து முடிந்து. அனைவரும் சென்றபிறகு நள்ளிரவு நேரத்தில் கிறிஸ்துதாஸ் மற்றும் அவரது மகன் உட்பட 20க்கும் மேற்பட்டோர் கும்பலாக வந்து காங்கிரீட் அமைக்க போடப்பட்டிருந்த மரப்பலகைகளை உடைத்து எறிந்து காங்கிரீட்டுகளை உடைத்து சேதப்படுத்தியதோடு, பக்கத்து வீட்டில் பொருத்தியிருந்த சிசிடிவி கேமராவையும்அடித்துஉடைத்து சேதப்படுத்தி உள்ளனர்.

நள்ளிரவில் வீடு உடைக்கும் சத்தம் கேட்டு அக்கம் பக்கத்தினர் ஓடி வந்த போது அந்த கும்பல் அங்கிருந்து தப்பி சென்றுள்ளது. இதுகுறித்து தகவல் அறிந்து வந்த பியூலாராணி மற்றும் அவரது மகள் ஆகியோர் பெரும் அதிர்ச்சிக்குள்ளாகினர். தொடர்ந்து பியூலாராணி தனது வீட்டை இடித்து சேதப்படுத்திய கிறிஸ்துதாஸ் மற்றும் அவரது மகன் உட்பட கும்பல் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் ஏற்பட்ட சேதத்திற்கு உரிய இழப்பீடு கிடைக்க வேண்டும் என்றும் தங்களது உயிருக்கு பாதுகாப்பு இல்லாத சூழல் ஏற்பட்டு உள்ளதாகவும் தங்களுக்கு உரிய பாதுகாப்பு வழங்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளனர். இது சம்பந்தமாக நித்திரவிளை போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர் இந்த நிலையில் மர்ம கும்பல் வீட்டை இடித்து சேதப்படுத்தும் சிசிடிவி காட்சிகள் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்திராசுந்தரம் தொண்டு நிறுவனம் சார்பில் பூப்புனித நீராட்டு விழா!




திருப்பூரில் இந்திராசுந்தரம் தொண்டு நிறுவனம் மூலமாக தமிழகத்தில் உள்ள பல்வேறு பகுதிகளில் அவர்கள் இடத்திற்கு நேரடியாக சென்று உதவி செய்யும் திருமதி இந்திரா சுந்தரம் அவர்கள் தனது வளர்ப்பு பேத்திகளாக வளர்த்து வரும் தேஜாஸ்ரீ தேவ ஸ்ரீ ஆகிய இரு திருச்செல்விகளுக்கும் திருப்பூர் காலேஜ் ரோட்டில் உள்ள தனியார் திருமண மஹாலில் 50க்கும் மேற்பட்ட சீர் வரிசைகளுடன் புப்புனித நீராட்டு விழா செய்தது அனைவரின் பாராட்டை பெற்றது மேலும் அவர்களின் கல்வி தேவைக்காக இன்சூரன்ஸ் மூலமாக வரும் ஒரு லட்சம் ரூபாய் கட்டி ஐந்து வருடங்களுக்கு அவர்கள் அந்த தொகையை கட்டி அவர்களது கல்லூரி படிப்பு முதல் திருமண வாழ்க்கை வரை முன்னின்று நடத்துவதென தெரிவித்துள்ளார் மேலும் இந்த பூப்புனித நீராட்டு விழாவிற்கு தனது நண்பர்கள் 500க்கும் மேற்பட்டோர் அழைத்து பிரம்மாண்டமான விழா செய்து அனைவருக்கும் அறுசுவை உணவு விருந்து அளித்து ஆச்சரியப்பட வைத்துள்ளார் திருமதி இந்திரா சுந்தரம் அவர்கள் இவரது இந்த செயல் பொதுமக்கள் பாராட்டி வருகிறார்கள் மேலும் இதில் சிறப்பு விருந்தினராக திரைப்பட நடிகர் அருண் ராஜன். திவ்யா கலந்து கொண்டு சிறப்பித்தனர் இந்த விழா விற்கான ஏற்பாடுகளை அனைத்தையும் செயலாளர் ராஜா முகம்மது ஏற்பாடு செய்திருந்தார்..

நீலகிரியில் கேரட் விவசாயம் கடும் பாதிப்பு! விலை வீழ்ச்சியால் மாடுகளுக்கு தீவனமாகும் கேரட்

விவசாயிகள் வேதனை!

உதகை: நீலகிரி மாவட்டம் உதகை மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகளில் கேரட் விவசாயம் செய்து வரும் விவசாயிகள், விளைபொருட்களுக்கு உரிய விலை கிடைக்காததால் கடும் அதிருப்தி அடைந்துள்ளனர். நீலகிரி மாவட்டத்தில் முக்கிய விவசாயப் பயிர்களில் ஒன்றான கேரட்டை விவசாயிகள்அதிகசெலவு செய்து பயிரிட்டு வருகின்றனர். விதை, உரம், பூச்சிக்கொல்லி மருந்துகள், தொழிலாளர் கூலி மற்றும் அறுவடைச் செலவுகள் என பல்வேறு செலவுகளைச் சமாளித்து கேரட்டை விளைவிக்கும் விவசாயிகளுக்கு, தற்போது சந்தையில் போதிய விலை கிடைக்காத நிலை ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. இதனால், அறுவடை செய்த கேரட்டை விற்பனை செய்து உற்பத்திச் செலவைக்கூட ஈடுகட்ட முடியாமல் விவசாயிகள் தவித்து வருகின்றனர். சந்தையில் உரிய விலை கிடைக்காததால், விளைவித்த கேரட்டை மாடுகளுக்கு தீவனமாக வழங்கும் அவல நிலை ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் வேதனை தெரிவிக்கின்றனர். ஏற்கனவே விவசாயச் செலவுகள் தொடர்ந்து அதிகரித்து வரும் நிலையில், விளைபொருட்களுக்கு உரியவிலைகிடைக்காதது விவசாயிகளின் வாழ்வாதாரத்தைப் பெரிதும் பாதித்துள்ளது. கடுமையாக உழைத்து விளைவித்த காய்கறிகள் உரிய விலையின்றி வீணாகும் நிலை தொடர்ந்தால், எதிர்காலத்தில் கேரட் விவசாயம் செய்வதற்கே தயக்கம் ஏற்படும்எனவிவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர். எனவே, நீலகிரி மாவட்ட விவசாயிகளின் நலனைக் கருத்தில்கொண்டு, கேரட்டுக்கு உரிய விலை கிடைக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், விவசாயிகளிடமிருந்து கேரட்டை நியாயமான விலைக்கு கொள்முதல் செய்ய உரிய ஏற்பாடுகள் செய்ய வேண்டும் என்றும் கோரிக்கை எழுந்துள்ளது. உழைத்து விளைவித்த கேரட் மாடுகளுக்கு தீவனமாகும் அவல நிலைக்கு முற்றுப்புள்ளி வைத்து, விவசாயிகளின் வாழ்வாதாரத்தைப் பாதுகாக்க அரசு விரைந்து நடவடிக்கை எடுக்குமா? என்பதே உதகை விவசாயிகளின் எதிர்பார்ப்பாக உள்ளது.



வள்ளலாரில் சுப்பிரமணியன் மருத்துவமனை திறப்பு விழா

வேலூர், அக் 21

வேலூர் மாநகரம் சத்துவாச்சாரி வள்ளலார் பகுதி 3 ஹரி ஓம் 2வது தெருவில் சுப்பிரமணியன் மருத்துவமனை திறப்பு விழா மற்றும் பொது மருத்துவம் பல் மருத்துவ இலவச ஆலோசனை முகாம் நடைபெற்றது. முகாமை தோட்டப்பாளையம் அரசு நகரவை மகளிர் மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் சத்தியபாமா சுப்பிரமணியன் குத்து விளக்கு ஏற்றி முகாமினை தொடங்கி வைத்தார். இம்முகாமில் பொதுமக்களுக்கு சர்க்கரை நோய் உயர் ரத்த அழுத்தம் ரத்த சோகை வயிற்றுப்புண் முதுகு வலி மற்றும் தசை வலி தாய்மார்களுக்கான கர்ப்பகால பராமரிப்பு பிரசவகால கவனிப்பு குழந்தைகளுக்கான சிறப்பு பரிசோதனைகள் மற்றும் பல் பரிசோதனை பல்சுத்தம் பல் நிரப்புதல் வேர் சிகிச்சை உள்ளிட்ட பல் வேறு மருத்துவ ஆலோசனைமற்றும் சிகிச்சைகள் இலவசமாக வழங்கப்பட்டது. பொது மருத்துவ பிரிவில் மருத்துவர் சாந்தினி சுப்பிரமணியன் பல் மருத்துவர் பிரிவை மெர்சி சாரா கேத்தரின் ஆகியோர் இலவச ஆலோசனை மற்றும் சிகிச்சைகளை வழங்கினர். ஏராளமான பொது மக்கள் முகாமில் கலந்து கொண்டு பயன்பெற்றனர் மருத்துவ முகாமில் மருத்துவமனை நிர்வாகிகள் ஊழியர்கள் மற்றும் மறைந்த ராணுவ சுபேதார். சுப்பிரமணியன் குடும்பத்தினர் கலந்து கொண்டனர்





திண்டுக்கல் மாவட்டம், கூட்டுறவு உணவு நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் சார்பில் DD 487திண்டுக்கல் மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலை (அபிராமி) சிறப்பு அங்காடி விற்பனை நிலையத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் துர்காமூர்த்தி, நிலக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் அய்யனார் முன்னிலையில், A தர சன்ன ரக அரிசி கிலோ ரூ.30க்கு விற்பனையை தொடங்கி வைத்தார். திண்டுக்கல் மாவட்டத்தில், DD 393தபால் தந்தி ஊழியர்கள் நுகர்வோர் கூட்டுறவுப் பண்டகசாலை, DD 487திண்டுக்கல் மாவட்ட கூட்டுறவு நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலை, கொடைக்கானல் கூட்டுறவுப் பண்டகசாலை, DD 500 அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் ஊழியர்கள் கூட்டுறவுப் பண்டகசாலை, A1392 வத்தலக்குண்டு நுகர்வோர் கூட்டுறவு பண்டகசாலை, DD 85 காந்திகிராமம் நுகர்வோர் கூட்டுறவு பண்டகசாலை ஆகிய அங்காடிகளை பொதுமக்கள் தொடர்பு கொள்ளலாம். என மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்தார். இந்நிகழ்ச்சியில், கூட்டுறவு சங்கங்களின் மண்டல இணைப்பதிவாளர் ஸ்ரீ ராகவ் பாலாஜி, துணை பதிவாளர் (பொதுவிநியோகதிட்டம்) கார்த்திகேயன், அபிராமிகூட்டுறவு பண்டக சாலை துணைப் பதிவாளர் கனகராஜ், மாவட்ட கூட்டுறவு ஒன்றிய மேலாண்மை இயக்குநர் செல்வகுமார், கூட்டுறவு சார்பதிவாளர் அருண்பிரபாகரன், பண்டக சாலை பொது மேலாளர் பரமேஷ்வரி உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.



திண்டுக்கல் மாவட்ட தீயணைப்பு அலுவலகத்தில் தீயணைப்பு வீரர்கள் தங்கள் குடும்பத்தினருடன் கலந்து கொண்டு தலைமை அலுவலர் மயில்ராஜ் தலைமையில் ஆயுத பூஜை மற்றும் விஜயதசமி கொண்டாடி குழு புகைப்படம் எடுத்துக் கொண்டனர்

DHINA TAMIL DAILY : Published and Printed By Rajasingh, Published from 16C, 246 Cross, Professor Joseph Street, Simon Nagar, Nagercoil - 629001.
Printing at Sree Murugan Printers, 209/A, Vaithyanathapuram, Kottar Post, Nagercoil - 629002. Ph : 99944 66200. Editor : Rajasingh. All Claims are subject to the Nagercoil Jurisdiction.